அதன் அவசியம் கருதி உடனடியாக இந்த ஆண்டாவது அதை எடுத்துக் கொண்டு அந்தப் பகுதியிலே போக்குவரத்து தடை ஏற்படும் நிலைமை ஏற்படாமல் நிவர்த்தி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டிலே எடுத்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு இல்லை. காரணம், திட்டங்கள் தீட்டப்பட்டு பணம் ஒதுக்கப்பட்டு விட்டது பல்வேறு காரியங்களுக்காக. ஆகவே அதை எடுத்துக்கொள்வதற்கான வாய்ப்பில்லை. வருகிற ஆண்டிலே எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்தேன். எடுத்துக் கொள்வதற்கு முன் இடையூறு ஏற்பட்டால், தற்காலிக மாக மாற்றுவழி ஏற்படுத்தலாம் என்று நினைக்கிறேன். எனவே அந்த அச்சம் தேவையில்லை என்று கருதுகிறேன். எதிர்காலத்திலே அதைப்பற்றி தீவிரமாக ஆலோசித்து முடிவு எடுக்கலாம்.

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுளி ஒன்றியம், நத்தம் அருகே ஆற்றின் குறுக்கே பாலம்

546—(*வினா எண் 12326) திரு. வெ. சொ. பஞ்சவர்ணம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதி திருச்சுளி ஒன்றியம் பரளச்சி-வடக்கு நத்தம் சாலையில் வடக்கு நத்தம் அருகே ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (இ) வினாவில் குறிப்பிடப் படும் பணியினை ரூ. 5.00 இலட்சம் செலவில் எடுத்துச் செய்ய 1987-88 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தில் சேர்க்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS